# தேசிய கல்வி நிறுவகம்

## கல்விக் கணிப்பீடும் மதிப்பீடும் பற்றிய டிப்ளோமா கற்கைநெறி

## Diploma in Educational Assessment and Evaluation

## (2026/2027)

தேசிய கல்வி நிறுவக பரீட்சைகள் துறையினால் நடத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்காக விண்ணப்பம் கோரப்படுகிறது.

**கற்கைநெறியின் தன்மை**

இது பரீட்சைகள்/ சோதனைகள், திட்டமிடல், ஒழுங்கு செய்தல், வினாப்பத்திரம் தயாரித்தல், விடைத்தாள் மதிப்பீடு செய்தல், பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடும், கல்வித்துறை அதிகாரிகளுக்கு முக்கியமான, இலங்கைத் தகுதிகள் சட்டத்தின் (Sri Lanka Qualification Framework) மூன்றாம் மட்டத்தைச் (SLQF Level 03) ஒரு கற்கை நெறியாகும்.

**கற்கைநெறி உள்ளடக்கம்**

1. அளவீடு, கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றின் பிரயோகம் (Applications of Measurement, Assessment and Evaluation)
2. சோதனைகள் தயாரித்தலும் பகுப்பாய்வு செய்தலும் (Test Constructions and Analysis)
3. சோதனை / பரீட்சை நிர்வாகம் (Test Administration)
4. கணிப்பீட்டு, மதிப்பீட்டுக் கருவிகள் தயாரித்தல் (Developing tools for Assessment and Evaluation)
5. கல்விப் புள்ளிவிவரவியலையும் புள்ளிவிவரவியல் மென்பொருள்களையும் பயன்படுக்கல் (Practices of Educational Statistics and Statistical Software)

**தேவையான தகைமைகள்**

1. க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்

அத்தோடு

2. அரச சார்ந்த /அரச தனியார் /சர்வதேச பாடசாலையொன்றில்/ பிரிவெனாவொன்றில் அல்லது வேறு கல்வி நிறுவனமொன்றில் ஆசிரியராக இருத்தல்.

அல்லது

அரச சார்ந்த/அரச தனியார் /சர்வதேச பாடசாலையொன்றில்/ பிரிவெனாவொன்றில் அல்லது வேறு கல்வி நிறுவனமொன்றில் அதிபராக இருத்தல்

அல்லது

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை ஆசிரிய ஆலோசகர் சேவை அதிகாரியாக இருத்தல் அல்லது இலங்கைக் கல்வியிலான சேவையை அல்லது தேசிய கல்வி நிறுவக கல்விசார் பணியைச் சேர்ந்த ஓர் அதிகாரியாக இருத்தல்.

அத்தோடு

2026.01.31 ஆம் திகதியன்று வயது 50 வருடங்களிலும் குறைவாக இருத்தல்

| | | |
|---|---|---|
| **காலவரையறை** | : | இது ஓர் ஓராண்டுக்கற்கை நெறி ஆகும். (வார இறுதி, பாடசாலை விடுமுறை நாட்கள்) |
| **மொழி மூலம்** | : | தமிழ் /சிங்களம் |
| **விரிவுரைகள்** | : | 75% மானவை நேர்முக அமர்வுகளையும் (Contact Session) 25% நிகழ்நிலையிலும் (Online) நடத்தப்படும். |
| **தெரிவு செய்யும் முறை** | : | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடத்தி அல்லது எழுத்துப் பரீட்சையையும் நேர் முகப் பரீட்சையையும் நடத்தி உச்ச தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளோர் தெரிவு செய்யப்படுவர் |
| **கற்கை நெறிக்கட்டணம்** | : | ரூபாய் 50,000/= |
| **பதிவுக் கட்டணம்** | : | ரூபாய் 2000/= |
| **விண்ணப்பக்கட்டணம்** | : | ரூபாய் 1200/= (மீளளிக்கப்படமாட்டாது) (இவைதவிர இறுதிப்பரீட்சைக்காக உரிய பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டும்) |

**விண்ணப்பிக்கும் முறை**

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள்

- தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் https://www.exams.nie.lk/intakes/new பிரவேசித்து, நிகழ்நிலை ஊடாக மாத்திரம் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். நிகழ்நிலையில் விண்ணப்பத்தை அனுப்புதல் தொடர்பாகத் தேவையான அறிவுறுத்தல்களைப் பின்வரும் இணைய இணைப்பினூடாகப் பெறலாம். (https://www.exam.nie.lk/info/applying-for-new- enrollments)
- இறுதியாக, பூர்த்தி செய்த விண்ணப்பத்தைத் தரவிறக்கம் செய்து (download) அதிபர்/ வலயக் கல்விப்பணிப்பாளர் / நிறுவனத் தலைவரின் விதந்துரைப்புடன் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பெறத்தக்க தேசிய கல்வி நிறுவக பணவைப்புச் சிட்டையைப் பயன்படுத்தி ரூபாய் 1200/= பணத்தை வைப்புச் செய்து அப்பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் ஒட்டி உங்களது பெயர் முகவரி எழுதப்பட்ட ரூபாய் 110.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9"X4" அளவுடைய **"கடித உறையொன்றுடன், கற்கை நெறி இணைப்பாளர், பரீட்சைகள் துறை, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம"** எனும் முகவரிக்கு 2026.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், DEAE-2026/2027 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**